பணித்தாள் - 1

வகுப்பு: 5-ஆம் வகுப்பு **மாணவர் பெயர்:_____**

பாடம்: தமிழ் **பாடத்தலைப்பு: இயல்-4, அறிவின் திறவுகோல்**

==========

I. சரியான சொல்லைத் தெரிவு செய்க:

1. அறிவியலறிஞர் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அறிவியல் + அறிஞர் ஆ) அறிவு + அறிஞர்

இ) அறிவியல் + லறிஞர் ஈ) அறவியல் + அறிஞர்

2. மணித்துளி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மணித் + துளி ஆ) மணி + துளி

இ) மண்+ துளி ஈ) மனி + துளி

3. பத்து + இரண்டு - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) பன்னிரெண்டு ஆ) பன்னெண்டு

இ) பன்னிரண்டு ஈ) பன்னண்டு

4. வேகமாக - இச்சொல்லுக்குரிய பொருள்

அ) மெதுவாக ஆ) விரைவாக

இ) கவனமாக ஈ) மெலிதாக

5. மரப்பலகை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மரப் + பலகை ஆ) மர + பலகை

இ) மரம் + பலகை ஈ) மரப்பு + பலகை

LIVEWORKSHEETS